Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 276

புதன்கிழமை
28 ஒகஸ்ட் 2024

ஆவணி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

முச்சந்தி முரளி



"குற்றத்திலும் கடும் குற்றம் போர்க்குற்றம் அதைச் செய்தவையை தண்டிக்காதவை எப்பிடி நாட்டைக் காப்பாத்துவினமாம்?"

# போர்க்குற்றவாளிகளை தண்டிக்கவே மாட்டோம்

## நடந்ததை அறியவே விசாரணை அநுரகுமார இப்படித் தெரிவிப்பு



**கொழும்பு, ஒகஸ்ட் 28**

**உள்நாட்டுப் போரின்போது மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட எவரையும் எமது ஆட்சிக்காலத்தில் தண்டிக்க முயற்சிக்கமாட்டோம் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.**

15

## காணாமலாக்கப்பட்டோருக்காக நாளைமறுதினம் பெரும் போர்!

### அணிதிரளுமாறு உறவுகள் அழைப்பு

கிளிநொச்சி, ஓக. 28

ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி (நாளைமறுதினம்) வடக்கு - கிழக்கு ரீதியாக, காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டே இந்தப் போராட்டங்கள் ஒழுங்கமைக்கப்

15

## முன்னாள் அமைச்சர் பௌஸிக்குச் சிறை!

### 10 ஆண்டுக்கு ஒத்திவைத்த 2 வருட கடூழியத் தண்டனை

கொழும்பு, ஓக. 28

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸிக்கு, 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்றுத் தீர்ப்பளித்தார்.

15

## இந்தியப் படகு விபத்து; இருவரைக் காணோம்

யாழ்ப்பாணம், ஓக. 28

கச்சதீவுக் கடற்பரப்புக்கு அருகில், படகு கவிழ்ந்ததையடுத்து தத்தளித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் இருவர் இலங்கைக் கடற்படையால் மீட்கப்பட்

15

## கிளிநொச்சியில் விபத்து: குடும்பஸ்தர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஓக. 28

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-9 வீதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15

## இலங்கை மீது கண்காணிப்பை இறுக்கமாக்குக!

### மனித உரிமைகள் கூட்டத்தொடரில் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்து

கொழும்பு, ஓக. 28

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட கண்காணித்தல் மற்றும் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான பொறிமுறைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆணையைப் புதுப்

15

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சையின்போது இறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

விபத்தில் காயமடைந்த நபரொருவர், கடந்த ஒரு வாரமாக சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், சிகிச்சையின்போது அவர் உயிரிழந்துள்ளார்.

புற்றளை, புலோலி தெற்கைச் சேர்ந்த இராசையா யோகராஜா (வயது-39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

15

## ஸ்ரீலங்காப் படையினர் மனிதாபிமானிகளாம்!

### போர்க்குற்றச்சாட்டு தேசத்துரோகம் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் பதறல்!



கொழும்பு, ஓக.28

போர்க் காலத்தில் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட ஸ்ரீலங்காப் படையினர் மீது போர்க்குற்றச்சாட்டுகளை முன்வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது இவ்வாறான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது, எமது இராணுவத்தின்

15

## மாவீரரின் கனவுகளுடன் களத்தில் நிற்கின்றோம்

### தமிழ்ப் பொதுவேட்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

இன விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களின் கனவு சுமந்தே ஜனாதிபதித் தேர்தல் களத்தில் நிற்கின்றோம். ஆதலால், தியாக தீபம் திலீபன், அன்னை பூபதி உள்ளிட்ட மாவீரர்களின் கனவுகளை நனவாக்கும்

15

## பாதிக்கப்பட்டோரை மையப்படுத்தியே நல்லிணக்கப் பொறிமுறை வேண்டும்!

### தென்னாபிரிக்கத் தூதுவர் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 28

உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க செயன்முறையானது பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியதாக அமையவேண்டியது அவசியம் என இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் சன்டைல் எட்வின் ஸ்கல்க் வலியுறுத்தியுள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு (ஓகஸ்ட் 30), காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தால் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் சிறப்பு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே, தென்னாபிரிக்கத் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டி

15

## நடுக்கடலில் உடல்நலக்குறைவு மீனவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் தங்கி நின்று மீன்பிடித் தொழில் ஈடுபட்டுவந்த மீனவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவேட்பாளரையே ரெலோ ஆதரிக்கின்றது

## மாற்றமில்லை என்கிறார் சுரேன் குருசாமி

யாழ்ப்பாணம், ஓக. 28

**ஜனாதிபதி வேட்பாளராக தமிழ்ப் பொதுவேட்பாளரின் ஆதரவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட எமது கட்சி அதே நிலைப்பாட்டிலேயே உள்ளது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ் ஜனாதிபதி வேட்பாளராக அரியநேத்திரன் போட்டியிடுகின்ற நிலையில் எமது ஆதரவை வழங்கியிருந்தோம்.

இந்நிலையில் தெற்கிலிருந்து ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரிடம் இருந்து பேச்சுக்கு வருமாறு அழைப்புக் கிடைத்தது சென்றோம். அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தி இருந்தோம். இந்தச் சந்திப்பின் பின்னர் ரெலோ ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கப் போவதாக சில விஷமிகள் பொய்ப் பரப்புரை செய்தனர்.

அது மட்டுமல்லாது அண்மையில் இலங்கைக்கான சுவிஸ் தூதர் பொதுக் கட்டமைப்பு சார்ந்தவர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்தார். சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினரான சித்தார்த்தன் பங்குபற்றிய நிலையில் நாங்கள் பங்கு பற்றவில்லை என்பதைக் காரணமாக வைத்து சிலர் விசமப் பரப்புரை செய்தனர்.

சுவிஸ் தூதர் யாழ்ப்பாணம் வந்த தன் நோக்கம் சிவில் அமைப்பு பிரதிநிதிகளை சந்திப்பதற்காக. திடீரென்று ஒழுங்குபடுத்தப்பட்ட சந்திப்பு என்பதால் எமது கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அதில் பங்குபற்றமுடியவில்லை.

தற்போதும் இரண்டாவது கட்டமாக ஜனாதிபதி வேட்பாளர்கள் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருக்கின்றனர் அவர்களுடனும் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

எமது கட்சி தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுவேட்பாளரின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாட உள்ளோம் - என்றார். (ஓ-20)

## ரணிலின் செலவுக்கு நான் உதவுவேன்!

### ஜனாதிபதி வேட்பாளர் திலித் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 28

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்காலத்தில் ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் அவர் வாழ்வதற்குத் தேவையான நிதியுதவியை கருணை அடிப்படையில் தான் வழங்குவதாக ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜெயவீர தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் கடப்பனகம பிரதேசத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித்தேர்தலிலே களமிறங்கவுள்ள வேட்பாளர்களின் மாதாந்த வருமானப் பட்டியலைப் பார்க்கும்போது எனக்குத் துக்கம் ஏற்படுகிறது. இந்த வருமானத்தைக்கொண்டு நாட்டிலுள்ள சாதாரணமக்களால் வாழமுடியாத நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்கள் வாழ்வதென்பது புதுமையான விடயமாகும். இது மக்களை இருட்டான பொருளாதார நிலைக்குத் தள்ளுவதாக அமைகிறது - என்றார். (ச-25-சி)

## இடைநிறுத்தப்பட்ட திலித்தின் விருந்து

கொழும்பு, ஓக.28

ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜெயவீரவின் தலைமையில் அநுராதபுரத்திலுள்ள விடுதி ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரவு நேர விருந்துபசாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் அலுவலர்கள் குழுவொன்று பொலிஸாருடன் குறித்த விடுதியை முற்றுகையிட்டது.

அங்கு விருந்தினர்களுக்கு வழங்குவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த உணவுப்பொதிகளை முத்திரையிட்டதோடு மதுபானப் போத்தல்களையும் கைப்பற்றினர். (ச-25.சி)





## தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு கிளி.யில் அமோக வரவேற்பு

கிளிநொச்சி, ஓக.28

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

நான்காவது நாள் பரப்புரை நடவடிக்கை சாவகச்சேரி, கொடிகாமம் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்துக்குச் சென்ற பொதுவேட்பாளர் தனது பரப்புரையை நேற்று ஆரம்பித்தார்.

இதன்போது பொதுவேட்பாளருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டிருந்ததுடன் கலை நிகழ்வுகளோடு, வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டார். பளை பேருந்து நிலையத்தில் வரவேற்பு நடனமும் உரைகளும் இடம்பெற்றன. (ச-100)

## மந்த நிலையில் 19 வேட்பாளர்கள்

கொழும்பு, ஓக.28

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்த வேட்பாளர்கள் 19 பேர் இதுவரைக்கும் எந்தவித தேர்தல்கள் பரப்புரை நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கவில்லை என ஜனநாயக சீர்திருத்தம் மற்றும் தேர்தல்கள் ஆய்வு நிறுவனத்திலுடைய நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இதுவரைக்கும் வாக்குப் பத்திரங்களை பிரதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒன்றரைக் கோடி செலவளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செலவு செய்த போதிலும் வேட்பு மனுத்தாக்கல் செய்த வேட்பாளர்கள் பலர் இன்னமும் தேர்தலுக்கான பரப்புரை நடவடிக்கைகளை இதுவரைக்கும் ஆரம்பிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ரீ-சி)

## மக்கள் ஆதரவற்ற பொன்சேகா கூட்டங்கள்

கொழும்பு, ஓக.28

முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியுள்ள சரத் பொன்சேகாவின் பரப்புரைக் கூட்டம் நுவரெலியாவில் நடைபெற்றது. இதிலும் பெருமளவில் மக்கள் பங்கேற்காததால் அவருக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமைக்கப்பட்ட மேடையில் பொன்சேகா உட்பட சுமார் 10 பேர் இருந்தனர். அத்துடன் கூட்டத்தின் போது ஏராளமான பொலிஸார் வரவழைக்கப்பட்டு தீவிரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. (ச-இ)

## 10 இலட்சம் வேலைவாய்ப்பு



கொழும்பு, ஓக.28

எதிர்வரும் 5 வருடங்களில் 10 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலங்களில் தேர்தல் மேடைகளில் சம்பளங்களை அதிகரிப்பதாக வாக்குறுதியளிக்கும் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

பணவீக்கத்துக்கு முகங்கொடுக்கும் வகையில் அரச பணியாளர்களின் சம்பளம் பணவீக்கத்துக்கு ஏற்றவகையில் மாற்றியமைப்பதற்கான பொறிமுறைமைகள் உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## பெரமுன விஞ்ஞாபனம் அடுத்த மாதம்

கொழும்பு, ஓக.28

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படவுள்ளது. கொள்கைப் பிரகடனத்தைத் தயாரிக்கும் இறுதிப் பணிகள் இந்த நாள்களில் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## முறைப்பாடுகள் 1,000

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதன்படி கடந்த ஜூலை 31ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் 1,052 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. நேற்றுமுன்தினம்வரை 127 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக வழியில் ஆட்சி; தகுதியற்றோர் சஜித், அநுர!

பந்துல சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 28

நாட்டை பங்களாதேஷ் ஆக மாற்ற முயன்றபோது ஜனநாயகத்தை பாதுகாக்கவும் மனித உயிர்களைக் காக்கவும் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தார். ஜனநாயகத்தைப் பாதுகாக்கத் தவறிய சஜித்துக்கோ அநுரவுக்கோ தேர்தலில் போட்டியிட எந்தத் தார்மீக உரிமையும் கிடையாது.

-இவ்வாறு தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கடந்த காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வீதியில் கொல்லப்பட்டனர். வீடுகள் எரிக்கப்பட்டன. நாட்டை பங்களாதேஷமாக மாற்ற முயன்றார்கள். ஜனநாயகத்தை பாதுகாக்கவும் மனித உயிர்களைக் காக்கவும் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்தார். நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுத்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் நிபந்தனைகளை ஏற்றிருக்காவிட்டால் ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே போன்ற நிலைக்கு நாடு சென்றிருக்கும். 2025 வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு எவ்வளவு தொகை தேவை என சஜித்தினால் கூறமுடியுமா?

ஜனாதிபதி செய்து கொண்ட உடன்படிக்கையை மீறினால் ஒரு மாதத்திலே நாடு மீண்டும் வீழ்ச்சியடையும் - என்றார். (ச-இ)




# விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஓக.28

பாரிசவாத தினத்தை முன்னிட்டு பாரிசவாதம் பற்றிய விசேட செயலமர்வு யாழ். நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாரிசவாத உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதி நரம்பியல் மருத்துவ நிபுணர் மருத்துவர் அஜந்தா கேசவராஜ் தலைமையில் கொக்குவில் பல்கலைக்கழக கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பல்கலைக்கழகப் பணிப்பாளர் மருத்துவர் விஜிதா தலைமையுரையையும். யாழ். நீரிழிவுகழகத் தலைவர் தி.மைக்கல் அறிமுகவுரையையும், மருத்துவர் அஜந்தா பாரிசவாதம் பற்றிய சிறப்பு விரிவுரையையும் ஆற்றினர். (ச-45)



# தே.ம.சக்தி அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.28

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணத் தேர்தல் பரப்புரை அலுவலகம் பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான பிமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகர், மதத் தலைவர்கள், கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். (ச-20,27)




# காதுகளால் 100 மீற்றர் தூரம் வாகனத்தை இழுத்துச் சாதனை!

யாழ்ப்பாணம், ஓக.28

தென்மராட்சியைச் சேர்ந்த செல்லையா திருச்செல்வம், ஆயிரத்து 500 கிலோகிராம் எடையுள்ள ஹைஏஸ் வாகனத்தை 100 மீற்றர் தூரம் தனது இரு காதுகளால் கட்டி இழுத்துச் சாதனை படைத்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். கொடிகாமம் ஏ-9 வீதியில் இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இதேவேளை - செல்லையா திருச்செல்வம், தனது தாடியால் பல்வேறு வாகனங்களை இழுத்து சாதனை புரிந்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ். தாவடி றைடர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 3ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தாவடி காளி அம்பாள் விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட துடுப்பாட்டப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இந்தப் போட்டியின் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து கொண்டார். போட்டியில் வெற்றி பெற்ற அணி களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (ச-22)



# அமிர்தலிங்கம் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஓக.28

பண்ணாகம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும்,தமிழர் விடுதலைக்கூட்ட ணியின் முன்னாள் செயலாளர் நாயகமும் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97 ஆவது ஜனனதினம் அவரது உருவச்சிலைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்வில் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங் கத்தினர், பொதுமக்கள் கலந்துகொண்டு மலர் தூவிஅஞ்சலித்தனர். (ச-25,27)



# நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஓக.28

உரும்பிராய் மேற்கு இளைஞர்களின் ஏற்பாட்டில், இளம் சமூகச் செயற்பாட்டாளர் ந.விஜயதரன் தலைமையில், ஈழத்தமிழின விடுதலைக்காக உயிர்நீத்த முதலாவது தற்கொடையாளர் தியாகி. பொன்.சிவகுமாரனின் 74 ஆவது ஜனனதின நிகழ்வு உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள அவரது உருவச் சிலையடியில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்றது. (ச-25,66)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.28

தமிழ்த்தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் புலம் பெயர்ந்து வாழும் பேராதனை பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானத்துறையின் பொறியி யலாளர் வல்லிபுரம் சுகந்தனின் “விடியலைத்தேடி” சிறுகதைத் தொகுப்பு மற்றும் “கூழ் முட்டைக் குள்ளிருந்து குஞ்சொன்று” என்ற கவிதைத்தொகுப்பு ஆகிய நூல்க ளின் வெளியீட்டு நிகழ்வு கிளி நொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற் றது.

தமிழ்த்தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் தீபச்செல் வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் , கிழக்கு பல்க லைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்தின் பீடாதிபதி மருத்துவர் வ.அநவரதன், கலைஞர்கள், படைப்பாளிகள், நூலாசிரியரின் நண்பர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25,113)

# வருடாந்த மஹோற்சவம்

கிளிநொச்சி, ஓக.28

முழங்காவில், நாச்சிக்குடா- கரடிக்குன்றில் தான்தோன்றியாய் எழுந்த பிரம்மம் ஆதிபராசக்தி நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும்1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள் ளது.

தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் 25 ஆம் திகதி புதன்கிழமை புற்றுப் பூஜை இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (ச-45)

# தியாக தீபத்துக்கு ஒரு துளி குருதி!

யாழ்ப்பாணம், ஓக.28

தியாக தீபம் திலீபனின் 37 ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு தியாகதீபம் ‘தீபத்துக்காக ஒரு துளி குருதி’ என்ற தொனிப்பொருளில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது. நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவு முற றத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிவரை இடம்பெற வுள்ளது.

இரத்ததான முகாமில் பங்கேற்று குருதிக்கொடை வழங்கு மாறு தியாகி திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-100)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். திட்டமிட்டு செயற்படுவதால் உங்கள் வேலை நிறை வேறும். புதிய பாதை தெரியும் நாள். வியாபாரத்தில் வாடிக்கையாளர் அதிகரிப்பர். முயற்சியில் வெற்றி உண்டாகும். ஆதாயமான நாள்.

**இடபம்:** நன்மையான நாள். மனக்குழப்பம் வில கும். செயல்களில் தெளிவு ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். சிந்தித்து செயற்பட வேண்டிய நாள். செயல்களில் இழுபறி உண்டாகும். புதிய முயற்சி யில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மிதுனம்:** நினைப்பது நிறைவேறும் நாள். செலவு அதிகரித்தாலும் முயற்சி வெற்றியாகும். எதிர் பார்ப்பு நிறைவேறும். வரவு – செலவில் கவனமாக இருக்க வேண்டிய நாள். அலைச்சல் அதிகரிக்கும். விருப்பம் நிறைவேறும் நாள்.

**கடகம்:** செல்வாக்கு உயரும் நாள். செயல்களில் இலாபம் காண்பீர். வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் அடைவீர். மகிழ்ச்சி அதிகரிக்கும். கவனமாகச் செயற்படவேண்டிய நாள். திட்டமிட்ட வேலை இழுபறியாகும்.

**சிம்மம்:** கவனத்துடன் செயற்பட வேண்டிய நாள். உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். உடன் பணிபுரி வோரால் நெருக்கடிக்கு ஆள்ாவீர். முன்னேற்றமான நாள். பணிபுரியும் இடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும்.

**கன்னி:** வியாபாரத்தில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். எதிர்பார்த்த வருமானம் வரும். மனதில் தெளிவு உண்டாகும். தடைகளைச் சந்திக்கும் நாள். உழைப்பு அதிகரிக்கும். வேலையில் நெருக்கடி ஏற்படும்.

**துலாம்:** முன்னோரை வழிபட்டு முன்னேற்றம் காண வேண்டிய நாள். வியாபாரத்தில் ஆதாயம் கூடும். குடும்பத்தில் இருந்த நெருக்கடி விலகும். விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். செயல்களில் நிதானம் அவசியம்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். நண்பர் உதவியுடன் முயற்சி இலாபமாகும். எதிர்ப்புகளை சந்திக் கும் நாள். எதிர்பாராத நெருக்கடிக்கு ஆளாவீர். யோகமான நாள்.

**தனுசு:** கவனமாகச் செயற்பட வேண்டிய நாள். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் இன்று போட்டியாளர்களால் சங்கடம் தோன்றும். பணி புரியும் இடத்தில் செல்வாக்கு உயரும். உங்க ளுக்கு தொல்லை கொடுத்தவர் விலகுவர்.

**மகரம்:** சூழ்நிலையை உணர்ந்து செயற்படுவீர். நீங்கள் எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். குழப்பத்துக்கு ஆளாகும் நாள். உங்கள் முயற்சியில் தடைகளும் தாமதமும் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தள்ளி வைப்பது நல்லது.


**கும்பம்:** இலாபமான நாள். உடன் பணிபுரிப வர்களால் நல்ல பெயர் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். தடைகளை சந்திக்கும் நாள். உங்கள் எதிர்பார்ப்பு இழுபறியாகும். வியாபா ரத்தில் நெருக்கடிகளை சந்திப்பீர்.

**மீனம்:** ஆதாயமான நாள். உங்கள் முயற்சி வெற்றியாகும். கவனமாகச்செயற்பட வேண்டிய நாள். நெருக்கடி தோன்றும். திட்டமிட்டு செயற்பட்டு இலாபம் காண வேண்டிய நாள். துணிச்சலாகச் செயற்படுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 43 ஆவது பீடாரோகன விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை நடைபெற்றது. (ரி-66)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பதினேழாம் நாள் இரவுத் திருவிழாவின் அருண கிரிநாதர் உற்சவம் கடந்த ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்றது. (ரி-66)



வரலாற்றுச்சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 19 ஆம் நாள் திருவிழாவான சூர்யோற்சவம் நேற்று சிறப்பாக நடைபெற்றது. (ச-25, 66-100-27)



முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு திருநகர் கிராமத்தில் தண்ணீர்த் தடாகம் ஒன்று ஆவினங்கள் நீர் அருந்துவதற்கும் சமய அனுட்டானங்களை மேற்கொள்வதற்குமாக அமைக்கப் பட்டுள்ளது. திருநகர் கமக்கார அமைப்பால் இந்தத் தடாகம் அமைக் கப்பட்டுள்ளது. (ச-13)



## சமூக விஞ்ஞானப் போட்டி கிளி.மாணவர்கள் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.28

கிளிநொச்சி தெற்கு வலய சமூக விஞ்ஞானப் போட்டிகளில் கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். உயர்தர மாணவன் ச.யதுசன் முதலாமிடத்தையும், தரம் 11 ஐ சேர்ந்த சு.யதுசனா, தரம் - 9 ஐ சேர்ந்த ச.திபிகன், தரம் - 6 ஐ சேர்ந்த ச.ரோகித் ஆகியோர் இரண்டாம் இடங்களையும்பெற்றனர். (ச-25, 13)

## நல்லூர்த் திருவிழாவின் 20 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.28

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இன்று 20 ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, யாழ்ப்பாணம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மாகலிங்கம் நிரேஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட இந்து நாகரிகத் துறை தலைவர் பேராசிரியர் கலாநிதி திருமதி விக்னேஸ்வரி பவநேசன், கௌரவ அதிதியாகக் கொழும்பு இந்து மாமன்றப் பொருளாளர் புசலகுமாரன், சிறப்பு அதிதியாக யாழ்ப்பாண மாவட்ட செயலகப் பிரதம பொறியியலாளர் கதிர்காமர் திருக்குமார் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

சுழிபுரம் யோகிகார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை, கற்பகப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்குவுள்ளனர்.

விசேட நிகழ்வாக சென்னை கலாஷேத்திரா கலைக் கல்லூரியின் முன்னாள் மாணவி பவித்திரா லிங்கேந்திரா வழங்கும் " நடன சமர்ப்பணம் " நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (45)




## வையம் புகழ்ந்திடும் கந்தா!

### நல்லூர்க் கந்தன் ஒருபா ஒருபஃது

நல்லூரான் பாதங்கள் நாடித் துதிப்போர்க்கு
எல்லா எண்ணங்களும் ஈடேறும் - பொல்லா
வினைகள் அனைத்தும் பொசுங்குமவன் பொன்னடியில்
நனைவோம் அருள்மனையில் நன்று.

நன்றே செய்திடுவான் நல்லூரின் நாயகன்
இன்றே அவனை இறைஞ்சிடுவோம்-வென்றே
துயர்கள் அனைத்தையும் தூய்மையுடன் நாளும்
உயர்வோம் உலகில் உருகு.

உருகி முருகனை உள்ளம் குளிரப்
பெருகு மவனருள் பேறே - தருவான்
பரகதி யென்றும் பரமன் இளையோன்
பரவிடுவோம் பாடிப் பணிந்து.

பணிந்திட நல்லூரான் பாதங்கள் தேடிப்
பிணியற வென்றேபிறரும் - அணியணியாய்
சென்று நல்லூர்வாயில் செவ்வேலன் தாள்பற்றி
நன்றே யருள் பெற நீ நாடு.

நாடிப் பணிந்திட நல்லூரான் இன்னருள்
கூடிக் குவிந்திடும் குன்றாது - ஓடி நீ
வள்ளி - தெய்வானையுடன் வண்ணமயி லோனைநாடு
உள்ளம் கவர்வா னுணர்.

உணர்ந்தவர் நல்லூரான் உற்ற வருளை
வணங்குவர் வையத்து வாழ்வில் - குணக்குன்றாய்
வீற்றிருந்து பொல்லா வினைகள் அறுத்திடுவான்
போற்றுவோம் அவனைப் புகழ்ந்து.

புகழ்மிக்க நல்லூர்ப் புனித விழாக்கள்
நிகழ்கின்ற வேளை நினைவோம் - குகனவன்
வாயிலில் கால் வைக்க வாழ்வு வளமடையும்
தாயிற் சிறந்த தலம்.

தலங்களில் நல்லூர் தனிச் சிறப்புக் கொண்டு
நலம்பல செய்திடும் நானிலத்தே - உலகெலாம்
வாழ்ந்திடும் பக்தர்கள் வாழ வழிகாட்டும்
ஆழ்ந்த அருளின் அகம்.

அகம்சிறக்க நல்லூரின் அப்பனை நாளும்
முகம்மலர வாழ்த்தி மொழிந்து - சுகம்பெற்றே
இவ்வுலகில் மாந்தர்கள் ஈடேறி என்றென்றும்
செவ்வையுடன் வாழ்சிறப்பு.

சிறப்புடன் பூசைகள் செய்திடும் நல்லூர்
அறப்பணி ஆற்றிடும் அன்பர் - முறைப்படி
சைவமதம் ஓங்கிச் சமூகம் மலர்ந்திட
வையம் புகழ்ந்திடும் வாழ்த்து.

■ ஆ. த. குணத்திலகம்
சில்லாலை, பண்டத்தரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தே.ம.சக்தி விஞ்ஞாபனத்தில் தமிழ்மொழிக்கு முன்னுரிமை

கொழும்பு, ஓக.28

**தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடன உரை முதலில் தமிழிலும், பின்னர் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.**

இறுதியில் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகு மார திஸாநாயக்க சிங்களத்தில் உரையாற்றினார். தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட அமைப் பாளரும் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான கலாநிதி சிவப் பிரகாசம் தமிழில் கொள்கைப்பிரகடன உரையாற் றினார்.

அடுத்ததாக கணக்காளர் சூரியப்பெருமா ஆங்கி லத்தில் கொள்கைப்பிரகடன உரையாற்றினார். நிகழ்ச்சியின் இறுதியில் தேசிய மக்கள் சக்தியின் தொனிப்பொருள் கீதம் தமிழில் இசைக்கப்பட்டது. (ச-6)



## இலங்கைக்கு கடத்தவிருந்த பீடி இலைகள் பறிமுதல்!

இந்தியா, ஓக.28

பாம்பன் அக்காள் மடம் வடக்கு பாக் ஜலசந்தி கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக படகில் பதுக்கி வைத்திருந்த 780 கிலோ பீடி இலை பண்டல்கள், கடத்தலுக்குப் பயன்படுத்திய வாகனம் மற்றும் படகு ஒன்றையும் பாம்பன் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின் றனர். பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகள் இலங்கை மதிப்புக்கு 12 இலட்சம் ரூபா எனத் தெரிய வருகிறது. (ச-25, 56)

## தடா. சந்திரசேகர் தமிழ்த் தேசியப் பற்றுறுதியாளர்

### சிறீதரன் எம்.பி. புகழாரம்

யாழ்ப்பாணம், ஓக. 28

தமிழினத்தின் மீட்சியில் அதீத கரிசனை யும், தமிழின விடுதலைப் போராட்டத்தின் மீதுநம்பிக்கையும்பெருவிருப்பும்கொண்டு, தன் இனம், அந்த இனம் மீதான ஒடுக்கு முறைகள், அதன் மீட்சி என்ற சிந்தனையி லேயே இனவிடுதலைப் பயணத்தின் பங் குதாரராக தன்னாலான அனைத்துப் பணி களையும் ஆற்றிய தமிழ்த்தேசியப் பெரு மனிதனான தடா.சந்திரசேகர் அவர்களின் இழப்பு, எமக்கெல்லாம் பேரிழப்பு என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். மதுரை சிவ கங்கை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது நினைவிடத் தில், அண்மையில் நடைபெற்ற அன்னாரது முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்று, நினைவுரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார். குறித்த நிகழ்வில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கி ணைப்பாளர் செந்தமிழன் சீமான், கட்சி உறுப்பினர்கள், தடா. சந்திர சேகர் அவர்க ளது குடும்பத்தினர், பொதுமக்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-26113)

## தென்னக்கோன் இந்தியா பயணம்

கொழும்பு, ஓக.28

உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து நீக் கப்பட்ட தேசபந்து தென்னக்கோன் அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என அறிக்கை யிடப்பட்டுள்ளது. அவர் தனது நல்வாழ்வு குறித்து கடவுளை வேண்டி யாத்திரை செய்வதற்காக இந்தி யாவுக்கு சென்றிருப்பதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. தென்னக்கோனை பதவியிலிருந்து இடை நிறுத்தாது வைத்திருப்பதற்கு ஜனாதிபதி ரணில் முயற்சித்துவந்த நிலையில் அவர் அவசரமாக நாட் டைவிட்டு வெளியேறியது சந்தேகத்தை தோற்றுவிப் பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-25-சி)

## மன்னார் கடலில் கைதான 8 இந்திய மீனவர் மறியலில்

மன்னார், ஓக.28

மன்னார் கடற்பகுதியில் அத்துமீறி கடற் றொழிலில் ஈடுபட்டபோது கைதுசெய்யப்பட்ட 8 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக் குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினரால் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-56)

# இந்தியாவில் புதிய சட்டம்

இந்தியா, ஓக.28

இந்தியாவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 'றைட் ரூ டிஸ்கனெக்ட்' எனும் புதிய சட்டம் நடை முறைக்கு வந்துள்ளது.

இதன் பிரகாரம் வேலை நேரத்துக்கு பின் வரும் எந்தவொரு தொலைபேசி அழைப்புகள், குறுஞ் செய்தி, ஈ-மெயில் ஆகியவற்றை பார்க்காது விடு வதற்கோ அல்லது பதிலை அனுப்பாமல் விடுவ தற்கோ பணியாளர்களுக்கு உரிமை உண்டு எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக விசாரிப்பதற்கு நிறுவனத்துக்கோ அல்லது நிறுவன உயரதிகாரிக்கு எந்தவொரு அதிகாரமும் இல்லை எனவும், அவ்வாறு விசா ரிக்கும் நிறுவனம் அல்லது உயரதிகாரியிடமி ருந்து அவுஸ்திரேலியா டொலர் 93ஆயிரத்து தொள்ளாயிரம் தண்டப்பணமாக அறவிடப்படும் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (ச-45 சி)

## தினம் தெரியுமோ?

எலக்சன் என்டாலே பசியுளுக்கும் பஞ்சமிருக்காது. இந்தமுறையும் அப்பிடியான முசப்பாத்தியள் அறம் புறமா நடக்கத்தான் செய்யுது. அதிலையும் பொன்சேகா வின்ர 'எள்ளுப்போட்டால் கூட கீழ விழ ஏலாத அள வுக்கு' சனவெள்ளம் நிக்கிற பிரசாரக் கூட்டப் படங் களைப் பாக்கேக்க பரிதாபமாக் கிடக்குது. ஆள் சும்மா சஜித்தோடயே ஒட்டிக்கொண்டு இருந்தாலாவது அடுத்த முறை எம்.பி. சீற் ஒண்டு கட்டாயம் கிடைச்சிருக்கும். ஆனால் ''நானும் ஜனாதிபதி வேட்பாளர்தான், எனக்கும் சனத்தின்ர சப்போர்ட் இருக்குத்தான்'' எண்டு குதிச்சவருக்கு கூட்டங்களில நல்ல பதில் கிடைச்சிருக்கு. நாலாயிரம் கதிரையும், பெரிய பந்தலும் போட்டும் கூட நாலைஞ்சு சனம் தான் வருகுதெண்டா ஆளுக்கு எத் தினை வாக்குவிழப்போகுதோ எண்ட நெஞ்சிடியும் தொடங்கியிருக்கும். இலங்கை முழுக்க அவருக்கு ஆயி ரம் வாக்கு விழுந்தாலே அதிசயம் தான். முந்திமொரு எலக்சனில அன்னத்துக்கு பதிலா கழுகுக்குப் போட்ட மாதிரி சில சனங்கள் சின்னம் தெரியாமல் மாறிப்போட் டாலே தவிர பொன்சேகாவுக்கு ஆயிரம் வாக்குக் கூட விழாது எண்டு எல்லாரும் அடிச்சுச் சொல்லுகினம். ஆனால் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன் மாதிரி கரும்புலி பாய்ஞ்ச காரோட ஆள் காசை செலவழிச்சு கூட்டங்களை வைச்சுக்கொண்டுதான் இருக்குது.

பொன்சேகா அந்தப் பக்கம் இப்பிடி வித்தை காட்ட, இஞ்சாலிப் பக்கமும் தென்னிலங்கை வேட்பாளர் மாருக்காகச் சிலர் காவடி ஆடிக்கொண்டிருக்கினம். கிட்டடியில ஒரு வேட்பாளருக்காக முன்னாள் பெண் அமைச்சர் ஒராள் சனத்திட்ட வாக்குக் கேக்க வாகனத்தில 'விஜயம்' செய்திருக்கிறா. ஆனால் பெரியாக்கள் ஒருத் தரும் சிட்டவும் வரேலை. வாகனத்தை விட்டு இறங்கியி ருந்தாலாவது ஆரும் ஒண்டிரண்டு பேர் கிட்டப்போய் என்ன ஏதெண்டு கேட்டிருப்பினம். ஆனால் அவா கீழ இறங்கேலையாம். ''என்னடா எங்கட ஊர்ப்பக்கம் புதிசா ஒரு வாகனம் வந்து நிக்குதே?'' எண்டு அந்த ஊரில இருக்கிற தவ்வல் பெடியள் வேடிக்கை பாக்கப் போயிருக்கிறாங்கள். அவங்களிட்ட நோட்டீஸைக் குடுத்து தங்கட வேட்பாளரின்ர சின்னத்துக்கு வாக்குப் போடச் சொல்லி அந்த முன்னாள் பெண் அமைச்சர் கேட்டிருக்கிறா. அந்தத் தவ்வல்களுக்கு வாக்குரிமையே இல்லை. அந்தப் பெடியள் ''கட்டாயம் உங்கட சின்னத்துக் குத்தான் எங்கட வோட். இஞ்சையுள்ள ஆக்களும் அதுக்குதான் போடுவினம்'' எண்டிட்டு அந்தச் சின்னத் தைப் பற்றி கொஞ்சம் புளுகித் தள்ள, அந்த முன்னாள் பெண் அமைச்சருக்கு கடும் சந்தோசம். அந்தச் சந்தோசத் தில திரும்ப ஒருக்கா அந்தப் பெடியளை சொல்லச்சொல்லி வீடியோ எடுத்து மேலிடத்துக்கும் அனுப்பியிருக்கிறா.

''இஞ்ச சின்னன் சிறுசு கூட உங்களுக்குத்தான் வோட் போடுவம் எண்டு சொல்லுதுகள், அந்தளவுக்கு உங்களுக்கு இஞ்ச நாங்கள் ஆதரவு திரட்டுறம்'' எண்டு காட்டத்தான் அந்த வீடியோ அனுப்பப்பட்டதாம். ஆனால் ''இப்பிடி சின்னன் பொன்னன் சொல்றதை நம்பி வீடியோ எடுக்காமல் ஒழுங்கா வாங்கின காசுக்கு வேலையைப் பாருங்கோ'' எண்டு மேலிடம் டோஸ் குடுத்திருக்கு.

அதைவிட சின்னப்பிள்ளையளை வைச்சு, வேட்பாளர்மார் விளம்பரம் செய்யக்கூடாது எண்டு தேர்தல் ஆணைக்குழுவும் அறிவிச்சிருக்குது. அதுவும் அந்த முன்னாள் பெண் அமைச்சருக்கு தெரியாது போல. அவா தன்ர விலாசம் காட்ட எல்லா இடமும் இப்பிடி சின்னப்பிள்ளையளிட்ட பிரசாரம் பண்றதை ஆரும் போட்டுக்குடுத்தால் பிறகு தேர்தல் ஆணைக் குழுவுக்கு என்ன பதில் சொல்றது எண்டும் அந்தக் கட்சி மேலிடம் குழம்பினதாம். இறக்கை கிடைச்சிட்டுதெண்டு குறுக்கமறுக்க பறந்தால் இப்பிடித்தான்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புயல்வேகமும் அன்னநடையும்

ஜனாதிபதித் தேர்தல் நெருக்கிக் கொண்டிருக்கும் நிலையில் பிரதான வேட்பாளர்கள் தங்கள் பரப்புரைகளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர். இம்முறை பிரதானமான மும்முனைப் போட்டியை எதிர்கொள்ளும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியாளரைத் தீர்மானிக்க, வாக்கெண்ணலில் இரண்டாம் சுற்றுக்குச் செல்லவேண்டியிருக்கும் என்ற எதிர்பார்ப்புகள் இருப்பதால் தேர்தல் திகதி நெருங்க நெருங்க பரப்புரைகள் புயல் வேகமெடுக்கும் என்று நம்பலாம். இம்முறை பிரதான வேட்பாளர்கள் எவரும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் - எதிர்பார்ப்புகள் தொடர்பான தங்களின் முடிவுகளைப் பகிரங்கமாக அறிவிக்காதநிலையில், தேர்தல் அறிக்கைகளை ஆராய வேண்டிய சூழ்நிலை எழுந்திருக்கின்றது. கடந்த காலங்களில் தெற்குத் தலைமைகள் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கும் தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களைத் தேர்தல் முடிந்ததும் கடாசிவிடுவது தான் வழமை. தமிழ் மக்களின் வாக்குகளை அறுவடை செய்வதற்காக தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையிலெடுக்கும் அவர்கள், தங்கள் காரியம் முடிந்ததும் அவற்றைக் கணக்கில் எடுப்பதில்லை. இப்படியான ஏராளமான கசப்பான அனுபவங்கள் தமிழ் மக்களுக்கு இருக்கின்றன.

பிரதான வேட்பாளர்களில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார். பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ள தேர்தல் அறிக்கையில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில், தமிழ் மக்களின் எதிர்பார்ப்பான சமஷ்டியை அவர் ஓரங்கட்டியிருந்தாலும், வடக்கு - கிழக்குடன் தொடர்புடைய பல விடயங்களை அநுரகுமார தொட்டிருக்கின்றார். அவற்றின் நடைமுறைச் சாத்தியங்கள் தொடர்பாக சந்தேகங்கள் இருக்கின்றபோதும், அந்தத் தேர்தல் அறிக்கை சற்று நிதானித்துக் கவனிக்கத்தக்கதாக இருக்கின்றது என்பது பலரது கருத்து. மற்றைய இரு பிரதான வேட்பாளர்களான ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மற்றும் தற்போதைய ஜனாதிபதியும், சுயேச்சை வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தேர்தல் அறிக்கைகள் இன்னமும் வெளியாகவில்லை. அவற்றில் வடக்கு - கிழக்கு எந்தளவு தூரம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை அறிய பொறுத்திருக்க வேண்டியிருக்கின்றது. மறுபுறத்தில், தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஒருமித்த குரலில் வெளிப்படுத்தும் நோக்குடன் களமிறக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் அறிக்கையும் எதிர்வரும் நாள்களிலேயே வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தெற்கில் தேர்தல் பரப்புரைகள் புயல் வேகத்தில் நடக்க, தமிழர் தரப்பில் தேர்தல் நடவடிக்கைகள் அன்ன நடையிலேயே இடம்பெறுகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் ஒரு மாதத்துக்கும் குறைவான நாள்களே இருக்கும் நிலையில், வெற்றி வாய்ப்புள்ள வேட்பாளரைக் கணிப்பது தடுமாற்றமாகவே இருக்கின்றது. தமிழ் அரசியல் தரப்புகள் மத்தியிலும் இன்னமும் ஒருமித்த தீர்மானம் எட்டப்பட்டதாக அறியமுடியவில்லை. தமிழ் மக்களின் வாக்குகளுக்காக தெற்கில் இருந்து தூண்டில்கள் வீசப்படலாம். இனி வெளியாகும் தேர்தல் அறிக்கைகளிலும் பல சலுகைகள் உள்ளடக்கப்படும் என்பதை நம்பலாம். அவற்றை அறிவார்ந்து ஆராய்ந்து சிந்தித்துச் செயற்படவேண்டியவர்கள் வாக்காளர்களே. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கிடைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாக அவர்கள் பயன்படுத்துவார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.




வடக்கு - கிழக்குக்கு வெளியிலுள்ள தமிழர்களும்

## தமிழ்ப்பொதுவேட்பாளரை ஆதரிக்கவேண்டும்

*சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை*

**வவுனியா, ஓக. 28**

**தமிழ்ப் பொதுவேட்பாளரான பா.அரியநேத்திரனை வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்லாது வடக்கு - கிழக்குக்கு வெளியே இருக்கக் கூடிய மக்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் செயலருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**

வவுனியாவில் வைத்து அவர் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த எட்டு ஆண்டுகளாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக தென்னிலங்கையைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கான பிரச்சினையை இதுவரை காலமும் தீர்க்கவில்லை.

அதனால்தான் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தியுள்ளோம். வடக்கு -கிழக்கிலே 12 இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் உள்ளார்கள். அதில் 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளை பெறுவதற்கான பணிகளை நாங்கள் ஆரம்பித்து இருக்கின்றோம்.

நிச்சயமாக இந்தத் தேர்தலிலே தமிழ் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு மற்றும் அரசியல் ரீதியான மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

இதில் 50 வீதமான மக்கள் வாக்களிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ஓ-18)

## நெல் கொள்வனவு அரசால் ஆரம்பம்

கொழும்பு, ஓக.28

இந்த வருடத்துக்கான நெல் கொள்வனவு நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

இதற்காக அரசாங்கம் 2,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## தே.அ.அட்டைக்கு பதிவுசெய்தோருக்கு விசேட கடிதம்

தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பம் அனுப்பி, அவை கிடைக்கப் பெறாதவர்களுக்கு விசேட கடிதம் ஒன்று வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்காக இந்த விசேட கடிதம் வழங்கப்படும் என ஆட்பதிவுத் திணைக்களத்தின் தென் மாகாண உதவிஆணையாளர்எம்.எல்.ஏ. சஞ்சீவ தெரிவித்துள்ளார். (ச)

## டயானா மீது குற்றப்பத்திரிகை

கொழும்பு, ஓக.28

போலி ஆவணமொன்றை சமர்ப்பித்து இலங்கை கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்ட வழக்குத்தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேமீது கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டது. (ச-இ)

## மாற்றுத் திறனாளர்கள் வாக்களிக்க ஏற்பாடு

கொழும்பு, ஓக.28

மாற்றுத்திறனாளிகள் உதவியாளர் ஒருவருடன் வாக்குச் சாவடிக்கு வந்து வாக்களிக்கலாம் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்களிக்க வரும் மாற்றுத்திறனாளிகள் கிராமசேவகரின் அத்தாட்சியுடன் மாற்றுத்திறனாளி என உறுதிப்படுத்தும் மருத்துவச்சான்றிதழையும் எடுத்து வர வேண்டும். சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளியின் பாதிப்பு (ஊனம்)தேர்தல் திணைக்களத்தின் மாற்றுத்திறனாளிகள் பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

### நாளை

29.08.2024

வியாழக்கிழமை - ஆவணி - 13

சுபநேரம் : 07.35 - 09.05

ராகுகாலம் : 01.35 - 03.05

ஏகாதசி விரதம்

### நாளொரு நல்வார்த்தை

சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவை இல்லை.


-அப்துல் கலாம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 05 . 1979

மறைவு
27 . 08 . 2024



## மகாலிங்கம் சிறிகாந்தன்

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சிறிகாந்தன் நேற்று (27.08.2024) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இளையதம்பி மகாலிங்கம் - மகாலிங்கம் தியாகவதி தம்பதியரின் அன்பு மகனும், சண்முகலிங்கம் - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜனிதா (ஆசிரியர் யா/மகாஜனக் கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும், தனோஜா, தர்சிகா (யா/மகாஜனக் கல்லூரி ஆகியோரின் அன்புத் தந்தையும், கோமதி, மலர்விழி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறிதரன், பாலகிருஸ்ணன், ஜனிந்திரன் (ஜேர்மன்), ஜனிந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பன்னாலை இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சமூர்த்தி வங்கி அருகாமை,
பன்னாலை.
தொடர்பு : 077 6510096

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
29 . 09 . 1943

இறப்பு
26 . 08 . 2024



## பேதுருப்பிள்ளை இம்மானுவல் இராஜசூரியர்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் இல. 44, டேவிட் வீதியை வசிப்பிடமாவும் கொண்ட பேதுருப்பிள்ளை இம்மானுவல் இராஜசூரியர் அவர்கள் கடந்த 26.08.2024 திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை - லில்லி மாகிறற் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியோகு சவிரியான் - குணகுந்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானமலரின் அன்புக் கணவரும், றொகான் (கணினிப் போதனாசிரியர் - இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, முல்லைத்தீவு), றொஷான் (உதவி முகாமையாளர் - LOLC, வவுனியா), றெனோஷன் (முன்னாள் NGO இணைப்பாளர் -மாவட்ட செயலகம், முல்லைத்தீவு மற்றும் தற்போதய நிர்வாக இணைப்பாளர் American Corner, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீதேவி, டினுஷா ஹஷானி (Credit Officer - CDB, யாழ்ப்பாணம்) மற்றும் தீபிகா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர் அலுவலகம், தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற லங்காவதி, லோறன்ஸ் மற்றும் அருளானந்தம், புஸ்பம், ஜோண்பிள்ளை, ஜெயசூரியர், காலஞ்சென்ற ஞானசேகரம் மற்றும் பாப்பா, தர்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ஜோர்ஜ், தேவமலர், றெஜினோல்ட் மற்றும் செல்வதி, புஸ்பவதி, ராணி, சர்வேஸ்வரி, மரியதாஸ், தாரணி, காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் றெஜினம்மா, இராஜேஸ், வின்சலஸ் டெனிஸ், ராஜினி ஆகியோரின் மைத்துனரும் விதுஷிக்கா, தஷ்வின், எறின் டெவினா, லீஷான் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (28.08.2024) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றொகான் - 077 359 7072
றொஷான் - 077 613 8955
றெனோஷன் - 077 330 1785

தகவல்:
குடும்பத்தினர்

# பொதுவேட்பாளரின் இன்றைய பரப்புரை

யாழ்ப்பாணம், ஓக. 28

பொலிகண்டி தொடக்கம் பொத்துவில் வரையான தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரனின் 'நமக்காக நாம்' பரப்புரை பயணம் கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்படவுள்ளது.

கரடிப்போக்கு சந்தியிலிருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமாகி உருத்திரபுரம், பூநகரி, முழங்காவில், ஜெயபுரம், வன்னேரிக்குளம், அக்கராயன் குளம், முறிப்பு, கோணாவில் ஊடாக பயணித்து டிப்போ சந்தியை வந்தடையும்.

குறித்த பரப்புரை வழித்தடத்தில் உள்ள சமூக மட்ட அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் உள்ளிட்டவற்றை சேர்ந்தவர்கள் அந்தந்த பகுதிகளில் மக்களை ஒன்றிணைத்து 'நமக்காக நாம்' பரப்புரைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (ஒ-100)

# யுனைரெட் பெற்றோலிய நிறுவனம் இலங்கையில் இன்று சேவை ஆரம்பம்

கொழும்பு, ஓக. 28

அவுஸ்திரேலியாவின் யுனைரெட் பெற்றோலிய நிறுவனம் இலங்கையில் இன்றைய தினம் தனது சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிலையில் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

150 முகவர்கள் ஊடாகவும் 50 மேலதிக நிலையங்கள் ஊடாகவும் எரிபொருள் விநியோகத்தில் இன்றுமுதல் ஈடுபடவுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இலங்கையில்தான் அந்த நிறுவனம் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது. இதற்காக 150 மில்லியன் டொலரை அந்த நிறுவனம் முதலீடு செய்துள்ளது. (ஒ-6)

## கொள்வனவு

நெல், தேங்காய், கொப்பறா, தானியங்கள், மில் உபகரணங்கள்

தொடர்பு: 077 772 2215

## வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம் வல்வெட்டித்துறை

### பிராமண குருமார் தேவை


மேற்படி ஆலயத்திற்கு நித்திய, நைமித்திய கிரியைகள் செய்யக்கூடிய குருமார் இருவரும் உதவி அர்ச்சகர், பரிசாதகர் (மடப்பள்ளி) வேலையாட்கள் தேவை. விருப்பமுடையோர் காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரை 10 நாட்களுக்குள் நேரில் சந்திக்கவும். பிற விடயங்கள் பேசித் தீர்மானிக்கப்படும்.

தேவஸ்தானம்

# 01ஆம் ஆண்டு நினைவு தினம்

பிறப்பு
08 . 09 . 1943

இறப்பு
09 . 09 . 2023



## அமரர் நடராசா தியாகராசா

அன்பான தந்தைக்கு அணிகலனாய் இருந்தீரே
அகிலத்தில் உமைப்போலே ஆருளரோ -
இப்பாரினிலே
ஆண்டொன்று ஆனதினால் ஆறிடுமோ எம்துயரம்
ஆண்டுகள் பல ஆனாலும் ஆசைமுகம் -
மறக்கலாமோ
பேசிடும் சொந்தங்கள் பாசமிகு பிள்ளைகளை
பாரினிலே தவிக்கவிட்டு வெகுதூரம் சென்றீரோ
போனவழி தேடுகிறோம் மீண்டு வரமாட்டீரோ
உண்ணாமல் உறங்காமல் உயிரோடு மன்றாடி
கண்ணான உம் குடும்பத்துக்காய்
காலமெல்லாம் உழைத்தீரே
எண்ணி எண்ணி தவிக்கின்றோம்
இதயம் தான் கலங்குதப்பா
மண்ணிலே வாழும் வரை
மறவோமே உன் வதனம்

காரம்பைக்குறிச்சி மேற்கு,
வரணி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# வயோதிபர் உயிரிழப்பு!

யாழ்., ஓக. 28

ஒரு வருடத்துக்கு முன்னர் மனைவி இறந்த நிலையில் கைதடியில் தனிமையில் வசித்து வந்த 72 வயதான முதியவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை வீட்டில் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்கு சடலம் எடுத்துவரப்பட்டு அங்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறமைமிக்கவர்கள் என்னிடம் உள்ளனர்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு




கொழும்பு, ஓக.28

அனைத்துக்கட்சிகளிலும் உள்ள திறமையானவர்களை ஒன்றிணைத்துக் கடந்த 2 வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வர என்னால் முடிந்தது. என்னுடன் இருக்கும் பொருளாதாரக் குழுவை விஞ்ச வேறு எந்தக் கட்சியிலும் குழுவொன்று இல்லை.

-இவ்வாறு கொழும்பில் இடம்பெற்ற சட்ட வல்லுநர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏனைய கட்சிகளில் உள்ள சிலர் என்னால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் என்பதால் அவர்கள் தொடர்பில் நன்கறிவேன். நாடு வங்குரோத்து நிலைக்குள்ளான போது, எனது அனுபவத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்ற நம்பிக்கை இருந்ததால் பொறுப்பை ஏற்றேன். இந்தப் பணியை முன்னெடுத்துச் செல்ல எனக்கு ஒரு சிறந்த குழு தேவைப்பட்டது. அந்த குழுவே நாட்டைக் கட்டியெழுப்பும் பணியைச் செய்தது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




# வாழைக்குலை திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.28

வலி.கிழக்கு பிரதேசத்தில் வாழைக்குலைகளை திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி போன்ற பகுதிகளிலுள்ள வாழைத்தோட்டங்களில் வாழைக்குலைகள் இரவு வேளைகளில் திருடிச் செல்லப்படுகின்றன. வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பை அடுத்து திருடர்கள் இவ்வாறு தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-17)

# செவ்விளநீருக்கு யாழில் கிராக்கி

யாழ்ப்பாணம், ஓக.28

யாழ்.குடாநாட்டில் செவ்விளநீருக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதோடு அவற்றின் விலையும் சடுதியாக உயர்வடைந்துள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆலய உற்சவங்கள் இடம்பெற்று வருகின்றமையால் அவற்றின் நுகர்வு அதிகரித்துள்ளது. செவ்விளநீர் ஒன்று 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-17)

# வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.28

கோப்பாய் வடக்கு தபால் பெட்டி வீதி நீண்டகாலத்தின் பின்னர் புனரமைக்கப்பட்டு வருகின்றது. கடந்த பல வருடங்களாக இந்த வீதி போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் சேதமடைந்து காணப்பட்டது.

தற்போது இந்த வீதியின் ஒரு பகுதி சிமெந்திலான கொங்கிறீட் இடப்பட்டு ஏனைய பகுதி தார் வீதியாகவும் புனரமைக்கப்படுகின்றது. (ச-17)



# அதிபரை மாற்றக் கோரி மன்னாரில் கவனவீர்ப்பு


மன்னார், வங்காலை புனித ஆனாள் கல்லூரி தேசியப் பாடசாலையின் அதிபரை உடனடியாக மாற்றக் கோரி பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர் இணைந்து பாடசாலைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த ... ஒரு வருடங்களுக்கு மேலாக பாடசாலையின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டதோடு, மாணவர்கள் சகல துறைகளிலும் பின்தங்கிச் செல்லும் நிலை காணப்பட்டுள்ளது. தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிபர் நிர்வாகத் திறன் அற்றவராக உள்ள நிலையில் உடனடியாக அவரை மாற்றி புதிய அதிபரை நியமிக்குமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்த போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாதமையாலேயே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்த மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் உடனடியாக குறித்த விடயம் தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்த நிலையில் போராட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-25,56)



எழுவைதீவு முத்தன்காடு ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு




அமரர் **பழனிப்பிள்ளை சிவன்செயல்** (ராசா-கந்தரோடை)

(ராஜன் ஒலி, ஒளி, சமுத்திர மகால்,

**Europower Lanka (Pvt) Ltd** உரிமையாளர்)

தோற்றம் 01.12.1949 — மறைவு 28.07.2024

எனது தந்தையாரின் நிகழ்வுக்கு அவரின் நண்பர்கள், தொழில்பழகியவர்கள், அறிந்தவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திகதி : 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : 11.00 - 3.00 மணிவரை**

**இடம் : சமுத்திர மகால் மருதனார் மடம்.**

**மகன்**

**077 652 9583**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
28.08.2024
புதன்கிழமை

இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் வலிகள்தான் உங்களை மீட்பதற்கான தேவதூதர்கள்
- ரூமி

■ ரா.லக்சிகா
கல்வி, பிள்ளை நலத்துறை
இரண்டாம் வருட கல்வியியல்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

நாம் கல்வி கற்கின்றோம் என்று கூறுவதை விட நாம் அனுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றோம் என்பதே சிறப்பான கல்விக்கு இலக்கணம் ஆகும்.




# நடைமுறைக் கல்வியில் பயன்பாட்டுவாதம்

கல்வியை ஆதாரமாகக் கொண்டுதான் ஒரு தேசம் சகல துறைகளிலும் முன்னேறமுடியும். உலகின் எல்லா நாடுகளும் இன்றைய போட்டிகரமான கல்விச் சூழலில் வெற்றி மகுடத்தை சூடி வருகின்றன. ஒவ்வொரு மானிடரும் உடல்நலம், உளநலம் இணைந்த இன்பகரமான வாழ்க்கை வாழ்ந்திடவும், உலக சமுதாய முன்னேற்ற பாதையில் செல்வதற்கும் கல்வியென்பது, தத்துவத்தின் அடிப்படையில் அமைய வேண்டியது கட்டாயமான ஒன்றாகும். அதற்கமைய தத்துவங்களை வழங்குகின்ற பல்வேறு வகையான கோட்பாடுகளில் அண்மைக்காலத்தில் பிரசித்தி வளர்ச்சி அடைந்த ஒரு எண்ணக்கருவே 'பயன்பாட்டுவாதம்' ஆகும். அமெரிக்கத் தத்துவவியலாளரான 'ஜோன்டியூவி' என்பவரின் கருத்துகளின் வெளிப்பாட்டினால் உருவாக்கம் பெற்ற இப்பயன்பாட்டுவாத கோட்பாடு இன்று கல்வியில் பல்வேறு வகையில் தாக்கம் செலுத்தி வருகிறது. 'இறுதியானது என்று ஒன்றுமில்லை, எதுவுமே நிரந்தரமற்றது, அறிவு முடிவானதொன்றல்ல, எல்லாமே காலம் இடம் என்பவற்றுக்கமைய மாற்றமடையும்' என்ற கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட பயன்பாட்டுவாதம் பலவகையில் கல்வியில் தாக்கம் செலுத்தி வருகிறது.

சமூகத்துக்கேற்றவாறு ஒவ்வொரு மாணவரையும் சிறந்த ஆளுமையுடையவர்களாக மாற்றுவதில் பயன்பாட்டுவாதம் அளப்பெரிய தாக்கத்தைச் செலுத்தி வருகிறது. மாணாக்கர்களுக்கு நிகழ்காலத் தேவை எதுவோ அதனை அறிந்து அதற்கேற்றவாறு கற்பித்தலையும் கற்றல் முறைமைகளையும் வழங்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பிரச்சினைகளையும் சவால்களையும் திறம்பட அணுகி புதியதொரு சூழலில் நவீன தொழில்நுட்பத்துக்கு அமைய நடைமுறை சூழ்நிலைக்கேற்றவாறு அணுகி சிறப்பாற்றல் உள்ளவர்களாக பயன்பாட்டுவாதத்தை நடைமுறையுடன் ஒப்பிட்டு கல்வியைப் புகட்டவேண்டும். மாணவர்களுக்கு வெறுமனே புத்தகங்களைப் பயன்படுத்தி புத்தகப் பூச்சிகளாவதைத் தவிர்த்து அனுபவத்தோடு கூடிய கல்வியை வழங்கவேண்டும். அனுபவ ரீதியிலான கல்வியே வாழ்வியலுக்கு சிறப்பான விசை ஆகும். கற்றலானது மாணவர்களுக்கே முதலிடம் கொடுக்கும் ஓர் உயிர்ப்பான செயற்பாடாக இருக்கவேண்டும். சமூக ஒற்றுமை, சமூக சமத்துவம் போன்றவற்றுக்கு ஏற்றவாறான பயன்தரு பாடங்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் இயல்பான தன்மை வாழ்க்கைக்கு பொருந்தக்கூடிய வாழ்நாள் நீடித்ததாக கல்வியில் கலைத்திட்டம் காணப்படவேண்டும் என்பது பயன்பாட்டுவாதத்தின் அடிப்படையாக உள்ளது.

**நவீன உலகுக்கேற்ற கல்வியே காலத்தேவை**


கல்வி என்பது அனுபவத்தை புதுப்பிப்பதாக அமைய வேண்டும் என்ற ஜோன்டியூவின் கருத்துக்கு அமைய கலந்துரையாடல்கள், குழுச் செயற்பாடுகள், பொருட்காட்சிகளை கண்டறிதல், பொருள்களை உருவாக்கல், கலைசார் வெளிப்பாடு போன்றவற்றை மாணவர்கள் அதிகம் விரும்புகின்றனர். இதற்கேற்றவாறான கல்வியை மாணவர்களுக்கு வழங்கி அவர்களை நவீன உலகுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கக்கூடிய பல்வேறு செயற்பாடுகள் இன்று மேற்கொள்ளப்படுகின்றன. மாணவர்களின் சிந்தனை ஆற்றலைத் தூண்டி, இயற்கையாக செயற்பட்டு வளர்ச்சி அடையும் இடமாகவும் சமூகத்தின் பிரதிபலிப்பாகவும் பாடசாலைகள் அமைகின்றன. பாடசாலையானது வெறுமனே பாடத்தைக் கற்பிப்பதோடு நில்லாமல் சமூக விடயங்களில் மாணவர்களை ஈடுபடுத்தி கூட்டுமுயற்சி, தொழிற்பாடு, தொடர்பாடல், பரஸ்பர நல்லெண்ணங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் வகையிலான அனுபவங்களை கற்றுக் கொடுக்க வேண்டும். சமூகம் தொடர்பான சிறந்த அறிவைப் பெற்றுக் கொடுத்து ஆக்கபூர்வமான நவீன சிந்தனைகளை தோற்றுவிப்பதற்கும், சமூகத்துடன் முன்னேறிச் செல்வதற்கும் பாடசாலையானது திறமைகளைக் கொண்டிருக்கவேண்டும். ஜனநாயக சமூக முன்னேற்றத்துக்கு எவ்வாறு வழிகோலுவது என கற்றுத்தரப்பட வேண்டுமென பயன்பாட்டுவாத கல்வி எதிர்பார்க்கின்றது.



**சமகாலக் கல்வி எதிர்கால வெற்றி**

கல்வி என்பது ஓர் தொடர்ச்சியான கருமத்தொடராகும். சமகாலக் கல்வி முறை தொலைவிலுள்ள எதிர்கால வாழ்க்கைக்கு தயார்ப்படுத்துவதாகும். முன்னாரம்ப பாடசாலை, இடைநிலை பாடசாலை, உயர்நிலைப் பாடசாலை, பல்கலைக்கழகம் என்றவாறு முழுக்கல்வியும் மாணவர்களை உயர்ந்த நிலையிலான வாழ்க்கைக்கு தயார்படுத்துவதற்கே ஆகும். இதற்கு அனுபவத்தோடு கூடிய பயன்பாட்டு ரீதியிலான கல்வி பெரும்பங்காற்றுகிறது. நடைமுறைப் பயன்பாட்டை கல்வியில் வலியுறுத்துவதன் மூலம் உண்மையான வெற்றிக்கு அவசியமான நடைமுறைத் திறன்களை வளர்க்க மாணவர்களை ஊக்குவித்த வண்ணம் பயன்பாட்டு வாதம் செயற்பட்டு வருகிறது. நாம் கல்வி கற்கின்றோம் என்று கூறுவதைவிட நாம் அனுபவத்தைப் பெற்றுக்கொள்கின்றோம் என்பதே சிறப்பான கல்விக்கு இலக்கணம் ஆகும். கல்வியானது அனுபவங்களால் அனுபவத்தின் மூலம் வழங்குவதாக அமையப்பெற வேண்டும். எந்தநாடு பயன்பாட்டுவாதத்தைப் பின்பற்றுகிறதோ அந்நாட்டால்தான் நவீன எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கமுடியும். ஐரோப்பிய நாடுகளில் வெற்றிநடை போடும் அனுபவக் கல்வி தொடர்பான அனுபவம் இலங்கைக்கு முற்றுமுழுதாகக் கிடைக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். நடைமுறைசார் விளக்கம் பல கல்வியாளர்களுக்கு காணப்பட்டாலும் வளப்பிரச்சினை அனுபவக் கல்விக்குத் தடையாக உள்ளது. இவ்வாறான தடைகளையும் சவால்களையும் எதிர்கொண்டு கல்வியில் வளர்ச்சி அடைந்த ஏனைய நாடுகளை போல இலங்கையும் கல்வி வளர்ச்சிக்கான பயணத்தில் வெற்றியடைய வேண்டுமானால் கல்விமான்கள் நடைமுறை சார் சீர்திருத்தங்களை மெருகூட்ட வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் எதிர்காலத்தில் இலங்கையின் கல்வித்தரம் மென்மேலும் உயரக்கூடிய சாத்தியம் உண்டு. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களிடத்தில் செயற்கைநுண்ணறிவு

■ கா.மலர்விழி
*இரண்டாம் வருடம்*
*கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை*
*கிழக்கு பல்கலைக்கழகம்.*

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் இன்று மாணவரிடத்தில் விரைவாகப் பேசுபொருளாகிவரும் ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. இன்று கல்வி, விவசாயம், வர்த்தகம், மருத்துவம் என எதிலும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் அசுர வளர்ச்சியடைந்து செல்கின்றது. மாணவர்களின் வாழ்க்கையில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் மிக அலாதியானதுடன், தவிர்க்க முடியாததாகவும் மாறியிருக்கின்றது. மாணவர்களின் கற்றலை செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் ஆழப்படுத்தியிருக்கும் அதேநேரம், ஏராளமான பிரச்சினைகளையும் இது அள்ளி வழங்கியிருக்கின்றது என்றால், அதை மறுப்பதற்கில்லை. அத்துடன், உளவியல் நோய், நேர விரயம், மன அழுத்தம் என்பவற்றையும் செயற்கை நுண்ணறிவு மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது என்றால், அதை மறுத்துரைப்பதற்கில்லை.

## பாதுகாப்பு இன்மை

மாணவர்கள் மற்றும் மாணவிகளின் ஒளிப்படங்கள் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால், பல மாணவிகள் தவறான முடிவெடுத்து தங்களின் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஆள் மாறாட்டம் உள்ளிட்ட மோசடிகளும் இதில் இடம்பெறச் சாத்தியங்கள் மிகமிக அதிகம்.

ஒரு மாணவனுக்கு என்ன வேண்டும்? எப்படிப்பட்ட தகவல்கள் வேண்டும்? என செயற்கை தொழில்நுட்பத்துக்குத் தெரியாது. இதனால், மாணவர்களின் தேவைக்கும் அப்பாற்பட்ட பொருந்தாத - பொருத்தமில்லாத தகவல் பரிமாற்றங்களும் இந்தத் தொழில்நுட்பத்தில் இடம்பெறும். இதை ஒரு மீளாளுமை கொண்ட திறன்மிக்க மாணவனால் பிரித்தெடுக்க முடிந்தாலும், அனைவராலும் அது இயலாது என்பதால் அத்தகைய மாணவர்களின் நிலை தொடர்பில் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

## வாசிப்புத்திறன் குறைவு

இப்பொழுதெல்லாம் மாணவரிடம் ஒரு கேள்வி எழுப்பப்படும் முன்னே அவர்கள் தங்களுடைய திறன் பேசிகளில் அது தொடர்பான தகவல்களைத் தேட ஆரம்பித்துவிடுகின்றனர். இது மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றது.

இதனால், இன்று நூலகத்தில் அமரும் மாணவர்களை விட இலவச 'வைபை' கிடைக்கும் இடத்திலேயே மாணவர்கள் அதிகம் அமர்வதைக் காணமுடிகிறது. இது காலப்போக்கில், மாணவர்கள் எந்தவொரு விடயத்துக்கும் பிறரைச் சார்ந்திருக்கவே வழிவகைகளை ஏற்படுத்துகின்றது.

அத்துடன் மாணவர்களின் நினைவாற்றலில் எதிர்மறைத் தாக்கங்களையும் இது ஏற்படுத்தவே செய்கின்றது. செயற்கைத் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியால், மாணவர்கள் தற்பொழுது உடலியக்க விளையாட்டுகளில் ஈடுபடுவது குறைந்துவிட்டது. இதனால் சோம்பல்தனம் மாணவர்களிடம் குடிகொண்டு விட்டதையும் அவதானிக்க முடிகின்றது.

## நிறைவாக

செயற்கை நுண்ணறிவு என்பது அற்புதமான ஒரு கண்டுபிடிப்பு. அது சாதகத்தனங்களையும், அதேநேரத்தில் பாதகத் தனங்களையும் தன்னகத்தே நிரப்பிவைத்திருக்கின்றது. அன்னப் பட்சி போன்று நல்லதையும் தீயதையும் மாணவர்கள் பிரித்தறியும்போது செயற்கை நுண்ணறிவு அரும்பெரும் வாய்ப்புகளை மாணவர்களுக்காக திறந்துவிடும் என்பதில் இரண்டாம் கருத்தில்லை. ■




# இளவயது மரணத்தை எட்ட எறிவோம்

■ பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி

நடுத்தர வயதுப் பருவம் குடும்பத்தினதும் சமூகத்தினதும் கட்டுமானத்துக்கு இன்றியமையாத ஒன்றாகும். பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு. ஆனால் நடுத்தரவயதில் இறப்பு ஏற்படுவதற்கு நாமே காரணமாகின்றோம். இதில் விபத்துகளும், தற்கொலைகளும், நோய்களுமே பிரதான இடத்தைப் பெறுகின்றன.

ஆயுட்கால கணக்கீட்டின் படி இலங்கையர்களின் சராசரி வயது ஆண்களுக்கு 70 என்பதாகவும் பெண்களுக்கு 79 என்பதாகவும் காணப்படுகின்றபோதும் தமிழர் தேசத்தில் இளவயது மரணம் அதிகரித்து வருவது துயரம் நிறைந்ததே. ஒரு நாளைக்கு குறைந்தது 2 அல்லது 3 நபர்கள் விபத்துகளால் உயிரிழக்கின்றனர். 'கண்கெட்ட பிறகு சூரியநமஸ்காரம் எதற்கு' என்பது போல மருத்துவமனை விபத்துப் பிரிவுக்குச் சென்று விபத்துக்குள்ளானவர்களுடன் கலந்துரையாடும்போது அவர்கள் கண்ணீரோடு தமது தவறுகளை கொட்டித்தீர்க்கின்றனர்.

தொற்றாநோய்களும் எமது இளைய சமூகத்துக்கு சாபக்கேடாகவே காணப்படுகின்றது. இவை மரணத்தின் வாசலை திறந்து விடுகின்றன. இவை வயது வேறுபாடின்றி பால் பாகுபாடு இன்றி அனைவரையும் பற்றிக் கொள்கின்றன. உயர்குருதி அமுக்கம், நீரிழிவு, புற்றுநோய், கொலஸ்ரோல், இருதயநோய், பாரிசவாதம், உளநோய் என இந்த நோய்களினால் ஆட்கொள்ளப்பட்டோர் அதிகம். தொற்றா நோய்க்கான முக்கியமான காரணங்களாகக் கருதப்படுவது உணவுப் பழக்கம், உடற்பயிற்சி இல்லாமை, உளநெருக்கடி, ஓய்வுறக்கம் இன்மை, மகிழ்ச்சியின்மை போன்றனவாகும். எண்ணெய், உப்பு, சீனி அடங்கிய உணவுகளை உண்பதை குறைப்பதோடு, விரைவுணகளைத் தவிர்க்கவேண்டும். தினமும் 30 தொடக்கம் 60 நிமிடங்கள் உடலில் இருந்து வியர்வை வெளியேறும் வரை உடல் பயிற்சி செய்யவேண்டும். பாடசாலைகளில் இருந்து உணவுப் பழக்க வழக்க முறையும் உடற்பயிற்சி செயற்பாடும் சரியான முறையில் ஆரம்பிக்கப்படவேண்டும். இவற்றையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகப் புறக்கணித்து எம்மை நாமே மரணத்தின் பிடிக்குள் தள்ளுகிறோம். மாறாக எமது முன்னோர்களிடம் மரணம் கூட மண்டியிட்டே காணப்பட்டது.



இன்று தொழில்புரிகின்ற அனைவரும் மகிழ்ச்சியைத் தொலைத்துக்கொண்டே வேலைசெய்கின்றனர். இதனால் உளநெருக்கீட்டுக்கு உள்ளாகின்றனர். இதற்கு காரணம் எமது வாழ்க்கையை திட்டமிட்டு முகாமை செய்யாமையாகும். இலக்குநோக்கி வேலைசெய்வதை விடுத்து, அதிகாரத்தைத் திருப்திப்படுத்த வேலைசெய்கிறோம். அது உள்ளத்துக்கு சுமையாகிறது, குடும்பத்துக்கு பகையாகிறது, உயிருக்கு உலையாகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ'

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 07 . 1962



மறைவு 26 . 08 . 2024

### மகேந்திரன் சாந்தி (கண்ணா)

வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் சாந்தி கடந்த 26.08.2024 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைஐயா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - மீனாட்சி தம்பதியரின் மருமகளும், மகேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், கண்ணன், கிருத்திகா, லிசானி ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜீவனின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08. 2024) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

072 668 5367
074 381 8437
077 724 5965

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 11230) A-1

# யாழ்ப்பாணத்துக்கு முதலீட்டாளர்கள் வருகை தருவதற்கு பின்னடிப்பு

*வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு*



**யாழ்ப்பாணம், ஓக. 28**

**யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவது என்பது சவாலாக காணப்படுகின்றது. வீதி போக்குவரத்து என்பது மிக நெடுந்தூரமாக காணப்படுவதன் காரணமாக முதலீட்டாளர்களின் வருகை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.**

ஆகவே நகரத் திட்டமிடலின் போது போக்குவரத்து தொடர்பை ஏற்படுத்தும் இலகு முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

தேசிய பௌதீக திட்டமிடல் தொடர்பான விசேட கலந்துரையாடல் வட மாகாண பிரதம செயலர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாண நகரத் திட்டமிடல் தொடர்பான அனைத்து திட்டமிடல்களையும், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் சமர்ப்பித்து அதற்கான அனுமதி பெறவேண்டுமென கோரிக்கை விடுத்தோம். அதற்கமைய, சமர்ப்பிக்கப்பட்ட திட்டமிடல்கள் தொடர்பான தமிழ் மொழியாக்கம் தேவை என மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நகர திட்டமிடல்களின் போது புவியியல் கேந்திரங்களை மையப்படுத்தி, இலங்கையின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு இந்தத் திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றன.


அத்துடன் ஏனைய திட்டங்களை முன்னெடுப்பதற்கு அனுமதிகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் காணப்படக்கூடிய சிக்கல் நிலைகளை தவிர்த்து எவ்வாறு இலகுவில் முதலீடுகளை மேற்கொள்வது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்துவது அவசியமாக காணப்படுகின்றது.

நகர திட்டமிடல்களின் போது பெருநகரங்களை அபிவிருத்தி செய்யும் அதே சந்தர்ப்பத்தில் ஏனைய சிறுநகரங்களையும் அபிவிருத்தி செய்து அவற்றையும் பெரு நகரங்களுடன் இணைக்க வேண்டும்.

கழிவு முகாமைத்துவம், பயணிகளுக்கான சிறந்த தங்குமிட வசதிகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கருத்தில் கொண்டு நகரத் திட்டமிடல்களை வடிவமைத்தல் அவசியம். வடக்கையும் கிழக்கையும் இணைக்க கூடிய வட்டுவாகல் பாலத்தை புனரமைப்பு செய்வது தொடர்பிலும் இந்த செயல்திட்டத்தில் கவனம் செலுத்துவது சிறப்பாக அமையும் - என்றார். (ஓ-26)

## மரண அறிவித்தல்

தோற்றம் . 15 . 02 . 1939



மறைவு . 26 . 08 . 2024

### சிதம்பரப்பிள்ளை அருணாசலம்

**(ஓய்வுநிலை முகாமையாளர், சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கம்)**

பறாளாய் வீதி, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை அருணாசலம் நேற்று (26.08.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு புத்திரனும், சுந்தரம்பிள்ளை-அமிர்தம் தம்பதிகளின் பெறாமகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், முகுந்தன் (பொறியியலாளர்- அவுஸ்திரேலியா), சேந்தன் (விரிவுரையாளர் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி), அமிர்தகணேசன் (கணிய அளவியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிவேதிதா (பல் மருத்துவர் - அவுஸ்திரேலியா) இன் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, பொன்னம்மா, முருகவேல், கமலாதேவி, இராமச்சந்திரன் மற்றும் மீனாம்பாள் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சிவசுப்பிரமணியம், அன்னப்பிள்ளை, சரோஜினிதேவி, இராசலட்சுமி, கோவிந்தம்மா, இராசபட்சம், உமாதேவி, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஓவியா, சத்தியன் ஆகியோரின் அன்பு பேரனும், அம்பலவாணர் லக்சிகாவின் பாசமிகு அப்புவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

"முத்தகம்"
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்
077 356 4950
075 549 3469

# கைலாசவாகன உற்சவமும் தங்கரத உற்சவமும்

யாழ்ப்பாணம், ஓக.28

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவின் இருபதாம் நாளான இன்று புதன்கிழமை காலை 6.45 மணிக்கு சந்தான-கோபாலர் உற்சவமும், இன்று மாலை 4.45 மணிக்கு கைலாசவாகன உற்சவமும் இடம் பெறவுள்ளன.

பெருந்திருவிழாவில் 21 ஆம் நாளான நாளை வியாழக்கிழமை காலை 6.45 மணிக்கு கஜவல்லி மஹாவல்லி உற்சவமும், மாலை 4.45 மணிக்கு தங்கரத உற்சவமும் நடைபெறவுள்ளன. (ரி-66)

# தீக்காயங்களுடன் சேர்க்கப்பட்ட பெண் சாவு

யாழ்ப்பாணம், ஓக. 28

தீக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் நேற்று உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலியைச் சேர்ந்த துவாரகன் நிருத்திகா (வயது - 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடும்ப பெண் கடந்த 25ஆம் திகதி தீயில் எரிந்த நிலையில் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

சடலம் மீதான இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஓ-27-23)

# ஆன்மீக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக.28

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாக் காலத்தில் நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் ஆன்மீக அருளுரை நடைபெற்று வருகின்றது.

அதில் இன்று புதன்கிழமை இரவு 8 மணியளவில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு.வேலன்சுவாமிகள் 'நேர ஒழுங்கு' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றுவார்.

(ச-66-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



## நிரோஷி புஸ்பகுமார்

தோற்றம் 15 . 10 . 1994

மறைவு 01 . 09 . 2021


துள்ளித் திரிந்த பெண் மான், தாங்காத் துயரம் கண்டு துவண்டு போனது
காரிருள் மேகம் சூழ்ந்ததால் அது கருகிப் போனது!
ஏழு ஆண்டுகள் நீ வளர்பிறையாய் வளர்ந்து வந்தாய்
மிளிர்ந்து வந்த நீ, கண் இமைக்கும் நேரத்தில் மின்னலாய் மறைந்து போனாய்
உனது 10 ஆவது ஆண்டு திருமண நாளும்
நீ அஸ்தமனமாகிய 3 ஆவது ஆண்டு நாளும் ஒரே நாளில் சங்கமிக்கின்றது
வானத்தை நோக்கி பார்க்கின்றோம்.....
வளர்பிறையாக வந்த உன்னைக் காணவில்லை
அமாவாசை நாளாகவே இருக்கின்றது
என்றோ ஒரு நாள் நீ மீண்டும் வளர்பிறையாக வருவாய்
என்று எண்ணி வானத்தையே பார்த்துக்கொண்டிருக்கின்றோம்
நீ வருவாய் என.......

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**அம்மா, அப்பா, பிள்ளைகள்,**
**அண்ணன்மார், அண்ணிமார்.**

**651 / 13, நாவலர் வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

(cs.56041) (2.6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 02 . 1946

மறைவு 26 . 08 . 2024

## நாகமுத்து பாலசிங்கம் (காந்தி)

காளிகோவிலடி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து பாலசிங்கம் (காந்தி) நேற்றுமுன்தினம் (26.08.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - யோகேஸ்வரி மற்றும் கமலாவதி தம்பதியரின் மருமகனும், பத்மாவதியின் (பவானி) அன்புக் கணவரும், மயூரா, கோபிகிருஷ்ணா, மீரா, சாஜிகிருஷ்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகநாதன், யாழினி, சிவரூபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திவாகரன் - தீபிகா, ஆதீசன், அட்ஷயன், ஆருஷன், பிருத்விகா, பிரதிஷ்கா, அஸ்விந், யஸ்விந் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கணேஸ், தங்கம்மா, குமாரசாமி (பொன்னர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இரத்தினசிங்கம் (காந்தி), பத்மராணி, இராஜேஸ்வரி, ஜெயக்குமார், ஶ்ரீரங்கராணி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2024) புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
077 436 9162
077 600 6526

**காளிகோவிலடி,**
**மல்லாகம்.**

(CR/42996) J-1

## யாழ்.இந்துவில் கலாசார விழா

யாழ்., ஓக. 28 யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் வாரத்தை முன்னிட்டுக் கலாசார விழா இன்று புதன் கிழமை காலை 8 மணியளவில் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சமஸ்கிருதத் துறைத் தலைவர் கலாநிதி மகேஸ்வரக் குருக்கள் பாலகைலாச நாத சர்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-66)

# மரண அறிவித்தல்



தோற்றம் 09 . 06 . 1939

மறைவு 27 . 08 . 2024

## வல்லிபுரம் செல்லத்துரை

(கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஓய்வுபெற்ற முகாமையாளர்)

ஐயாகடையடி, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை நேற்று (27.08.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அம்மாக்குட்டி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் செல்வமலர், புஸ்பமலர் (பிரான்ஸ்), உமாமனோகரமலர் (இத்தாலி), மணிவண்ணன் (சுவிஸ்), திருமால்மருகன் (சுவிஸ்), சுந்தரமலர் (பிரான்ஸ்), துவாகரன் (பிரான்ஸ்), துசேரகரன் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
074 302 7727

**ஐயா கடையடி,**
**மீசாலை.**

(cs.56038) (N.1)

# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

25.08.2024

## திரு.கோவலன் பூனேஸ்வரன்

(அலுவலகப் பணியாளர்) கிளி / கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்



விண்மீன்கள் ஒளியனுப்பி
விடிந்ததொரு பொன்னாளென - உரைக்க
வீசு இளம் தென்றல் வந்து
60 ஆவது அகவைதனை சொல்ல
விடை பெறுகின்ற குணாவை
வாழ்த்தி நீண்ட சேவை தனை
செவ்வனவே செய்து
எல்லோர் மனங்களிலும் இடம்பிடித்து
தன் கடமை தனை நேர காலம் - பாராது
இரவு பகல் உழைத்து மக்கள் - சேவை
மகேசன் சேவையாக கருதி.

தன் உழைப்பை வழங்கிய
பணியாளரை வாழ்க வளமுடன்
சகல செல்வங்களும் பெற்று நீண்ட
ஆயுளுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**சேவைக் காலம்**

| | | |
|---|---|---|
| 1. கிளி/ அக்கராயன் ம.வி | - | 1998 - 2008 |
| 2. கிளி/ கோணாவில் ம.வி | - | 2008 - 2013 |
| 3. கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா ம.வி | - | 2013 - 2016 |
| 4. கிளி/ பாரதி வித்தியாலயம் | - | 2016 - 2020 |
| 5. கிளி/ இந்து ஆரம்ப வித்தியாலயம் | - | 2020.02.11-2024.08.24 |

**பாடசாலை சமூகம்**
**கிளி/ கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

2010 ஆம் ஆண்டு, ஏ.எச்.எம்.பௌஸி இடர் முகாமைத்துவ அமைச்சராகக் கடமையாற்றியபோது, நெதர்லாந்து அரசாங்கத்தால் அமைச்சுக்காக வழங்கப்பட்ட சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான சொகுசு வாகனத்தை தனது தனிப்பட்ட பாவனைக்காக பயன்படுத்தியதாகவும், வாகனத்தின் பராமரிப்புக்காக சுமார் 10 இலட்சம் ரூபா பணம் செலவழித்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுகளை பௌஸி ஒப்புக்கொண்டதையடுத்து, குற்றச்சாட்டின் பேரில் அவர் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்ததுடன் 4 இலட்சம் ரூபா அபராதம் செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். அத்துடன் 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் அவருக்கு விதிக்கப்பட்டது. (அ-ஒ-இ)

## மாவீரரின்...

வகையில் சங்கு சின்னத்துக்கு வாக்களித்து பேராதரவை வழங்குமாறு தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் நல்லூர் தியாக தீபம் திலீபன் நினைவு முன்றலில் இருந்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'பொலிகண்டி முதல் பொத்துவில் வரைக்கும்' முன்னெடுக்கப்பட்டு வரும் 'நமக்காக நாம்' பரப்புரை பயணத்தின் நான்காவது நாள் பரப்புரை நடவடிக்கை நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத்தூபிக்கு நேற்றுக்காலை அஞ்சலி செலுத்தி ஆரம்பித்து கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எமது இனத்துக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்பதாகவே மாவீரர்களது கனவுகள் இருந்தன. அதனை ஒத்தாகத் தான் இந்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் பொது வேட்பாளராகக் களமிறங்கியுள்ளோம். தமிழ் மக்கள் ஒற்றுமையாக ஓரணியில் நிற்கின்றோம் என்பதனை எடுத்துக்காட்டுவதற்கும் அரசியல் தீர்வு காணப்பட்டே ஆகவேண்டும் என்பதை இடித்துரைக்கும் வகையிலும் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிடுகின்றோம்.

எமக்கான அரசியல் தீர்வு வழங்கப்படாது இலங்கையின் ஜனாதிபதிகளினாலும் பிரதமர்களினாலும் நாம் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம் என்பதைக் காண்பிப்பதற்காக இந்தத் தேர்தல் களத்தை ஒரு சவாலாக முன்னெடுத்திருக்கின்றோம் என்பது உண்மை.

தியாக தீபம் திலீபன் நினைவிடத்தில் இருந்து நாங்கள் சொல்லுகின்ற விடயம், 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு 37 ஆண்டுகள் கடந்துவிட்டது. திலீபனின் தியாகமும் 37 வருடங்கள் கடந்துள்ளது. இனிமேலும் நாங்கள் ஏமாறத் தயாராக இல்லை என்பதனை இலங்கை, இந்திய, சர்வதேச நாடுகளுக்கு வெளிப்படுத்தும் வகையில் தமிழ் மக்கள் ஒற்றுமையாக தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கவேண்டும்.

நாங்கள் அபிவிருத்திகாகவோ, சலுகைகளுக்காகவோ வாக்குறுதி அளிக்கவில்லை. ஜனாதிபதி வேட்பாளர்கள் சிலரின் தேர்தல் அறிக்கைகள் வெளியாகியுள்ளன. தமிழ் மக்கள் தொடர்பிலோ அரசியல் தீர்வு பற்றியோ எவரும் குறிப்பிடவில்லை. ஊழல் தொடர்பிலும் அபிவிருத்தி தொடர்பிலும் ஒரே நாட்டுக்குள் தீர்வு என்பதைப் பற்றித்தான் கூறுகின்றார்கள்.

இனிமேலும் நாம் நம்பி ஏமாறாது எங்களுக்கான உரிமைகளையும், அரசியல் தீர்வுக்கான அவசியம் குறித்தும் தேசமாக ஒன்று திரண்டு இடித்துரைக்கும் வகையில் செப்ரெம்பர் 21ஆம் திகதி வாக்குச்சாவடிகளுக்குச் சென்று சங்குச் சினத்துக்கு புள்ளடி போட்டு பேராதரவை வழங்க வேண்டும்” - என்றார். (அ-ஒ-100)

## கண்காணிப்பை...

பிக்குமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர், செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள நிலையில், இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள தீர்மானங்கள் மற்றும் பிடிமானங்களைப் புதுப்பிக்குமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் வெளியிடப்பட்ட புதிய அறிக்கையில் அடிப்படைச் சுதந்திரங்கள் சார்ந்து இலங்கையர்கள் பல்வேறு புதிய அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டில் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியின் விளைவாக வறுமை மட்டம் இரு மடங்கால் அதிகரித்துள்ளது.

நாட்டிலுள்ள மொத்தக் குடும்பங்களில் கால்பங்கு குடும்பங்கள் உணவுப்பாதுகாப்பின்மை நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதாக ஐ.நா. மதிப்பிட்டுள்ளது. ஊழல் மோசடிகள் மற்றும் முறையற்ற பொருளாதார நிர்வாகம் தொடர்பான பொறுப்புக்கூறலும், ஜனநாயக மறுசீரமைப்புகளும் இன்னமும் பெருமளவுக்குப் பூர்த்திசெய்யப்படவில்லை எனவும் மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட கண்காணித்தல் மற்றும் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான பொறிமுறைக்கான ஆணையை மீளப்புதுப்பிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகளிடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் வலியுறுத்தியுள்ளார்.

அதனை நாம் மீளவலியுறுத்தும் அதே வேளை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் மேற்குறிப்பிட்ட ஆணையை மீளப்புதுப்பிப்பதற்கு உறுப்புநாடுகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றோம்” - என்றுள்ளது. (அ-ம)

## போர்க்....

அசோசியேஸ்ட் பிரஸுக்கு வழங்கிய நேர்காணலின் ஒரு பகுதியாக இந்த விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக, மனித உரிமை மீறல்கள் எனக் கூறப்படும் குற்றங்களை விசாரிப்பதிலும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருடன் உடன்பாட்டைப் பெறுவதிலும் கவனம் செலுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

'பொறுப்புக்கூறல் தொடர்பான விவகாரம், பழிவாங்கும் வகையில் இருக்கக்கூடாது, ஒருவரைக் குற்றம் சாட்டும் வகையில் இருக்கக்கூடாது, ஆனால் உண்மையைக் கண்டறிய வேண்டும்' என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

'போரால் பாதிக்கப்பட்டவர்கள் கூட யாரும் தண்டிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. என்ன நடந்தது என்பதை மட்டுமே அவர்கள் அறிய விரும்புகிறார்கள்' எனவும் அநுர அந்த நேர்காணலில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி - கனகாம்பிகைக் குளம் பகுதியைச் சேர்ந்த அருள்நேசன் அருள்வதனன் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். லொறி - மோட்டார்சைக்கிள் என்பன மோதிக் கொண்டதிலேயே இந்த இறப்புச் சம்பவித்துள்ளது. சடலம் கிளிநொச்சி மருத்துவமனைக்குக்கொண்டு செல்லப்பட்டது. இறப்புத் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-113-66-27-23)

## உடல்...

கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த முகமட் றஸ்லான் (வயது-21) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா இறப்பு விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-ம-100)

## பாதிக்கப்பட்டோரை...

யெழுப்புதலை இலக்காகக்கொண்டு நிறுவப்படும் கட்டமைப்புகள் பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்தியவையாக அமையவேண்டும். தென்னாபிரிக்காவில் அத்தகைய பொறிமுறையால் தான் நாம் வெற்றி கண்டோம். நல்லிணக்கச் செயன்முறை என்பது மிகவும் அவசியமானது. எனினும், அது சகல சந்தர்ப்பங்களிலும் மிகத்துல்லியமானதாக இருப்பதில்லை என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும் - என்றார்.

தென்னாபிரிக்காவில், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு நிறுவப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள், மன்னிப்பு வழங்கும் பொறிமுறை உள்ளிட்ட பல்வேறு விடங்கள் குறித்தும் தென்னாபிரிக்கத் தூதுவர் பகிர்ந்து கொண்டார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான இடைக்கால செயலகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கலாநிதி அசங்க குணவன்ச, பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், சர்வதேச இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுத்தூதுவர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர். (அ-ம)

## ஸ்ரீலங்காப்...

மீதான நல்லபிமானத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதலாகவே கருத வேண்டியுள்ளது. எனவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சியில் இராணுவத்தினரின் கௌரவம் பாதுகாக்கப்படும் என்றும் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சில நாடுகளில் இடம்பெறும் போரின் போது சிவிலியன்கள் அப்பட்டமாகக் கொல்லப்படுகின்றனர். இது தொடர்பில் எந்தவொரு நாடும் வாய் திறப்பதில்லை. ஆனால் இங்கு ஒரு பிரிவினர் இராணுவத்தினரை இலக்கு வைத்துச் செயற்படுகின்றனர். இராணுவத்தினரை நீதிமன்றங்களுக்குக் கொண்டுச்சென்று போர்க் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

ஒரு புறத்தில் சிறையில் இருந்து புலிகள் விடுவிக்கப்படும்போது மறுபுறத்தில் படையினரை குற்றவாளிகளாகக் காண்பிப்பதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது ஆட்சியில் இராணுவத்தின் கௌரவம் பாதுகாக்கப்படும். பௌத்த கலாசாரத்துக்கு பொருத்தமற்ற எந்தவொரு நடவடிக்கைக்கும் எமது ஆட்சியில் இடமளிக்கப்படமாட்டாது” - என்றார். (அ-ம-ச-44)

## இந்தியப்...

டுள்ளனர். கச்சதீவில் இருந்து சுமார் எட்டுக் கடல்மைல் தொலைவில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழக மீனவர்களின் படகு அலையால் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தையடுத்து, தத்தளித்துக் கொண்டிருந்த இரண்டு மீனவர்களே இலங்கைக் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் இரண்டு மீனவர்கள் காணாமற்போயுள்ள நிலையில், அவர்களைத் தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-27-20)

## விபத்தில்...

கடந்த 21 ஆம் திகதி இரவு புலோலி, கிராமக்கோட்டுச் சந்திப் பகுதியில் சைக்கிள் - வான் இடையிலான விபத்தில் அவர் காயமடைந்திருந்தார். பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட நிலையிலேயே, சிகிச்சையின்போது அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா மேற்கொண்டார். (அ-ம-100)

## காணாமலாக்கப்....

பட்டுள்ளன. இது தொடர்பில் காணாமலாக்கப்போரின் உறவுகள் மேலும் தெரிவித்ததாவது:-

“இறுதிப்போர் நிறைவுக்கு வந்த நாள்முதல் எமது உறவுகளைத் தேடி வருகின்றோம். இது வரையில் எமக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை. உள்ளக விசாரணைகளின் ஊடாக நீதி கிடைக்கும் என நாங்கள் நம்பவில்லை. எனவேதான் நாம் சர்வதேச விசாரணைகளைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். அந்த வகையில் எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கில் திருகோணமலையிலும் போராட்டங்களை

முன்னெடுக்கவுள்ளோம். அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், சங்கங்கள் என அனைத்துத் தரப்பினரும் எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும்” - என்றனர். (அ-ம-26-19-20-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளர் திலீபன் தூபியில் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஓக.28

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீப னின் நினைவுத்தூபிக்கு நேற்று செவ்வாய்க் கிழமை காலை மலர் அணிவித்து தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் அஞ் சலி செலுத்தினார்.

'பொலிகண்டி முதல் பொத்துவில் வரைக்கும்' முன்னெடுக்கப்பட்டுவரும் 'நமக்காக நாம்' பரப்புரை பயணத்தின் நான்காவது நாள் பரப்புரைநடவடிக்கையாகதியாகதீபம்திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி ஆரம்பிக்கப்பட்டு சாவகச் சேரி, கொடிகாமம், பளை ஊடாக கிளி நொச்சி நோக்கி முன்னெடுக்கப்பட்டுள் ளது.

இதன்போது தமிழ்த் தேசிய பொதுக்கட்ட மைப்பைச் சேர்ந்தவர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ச-100.20)

## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.28

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ். நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ் தான வருடாந்த மஹோற்சவத்தை முன் னிட்டு ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ் வுகள் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட் கிழமை வரை இடம்பெறவுள்ளன. நல் லூர் ஸ்ரீஸ்கந்தபதி கலாமன்ற பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (ரி)

**அம்மன் திருமண சேவை**

1984ல் பிறந்த 4 ல் செவ்வாய் உடைய அரச உத்தியோகத்தில் இருக்கும் விஸ்வகுல மணமகனிற்கு தகுந்த வரனை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு:
Whatsapp:070 500 1234

**நேரடி ஒளிபரப்பு**

உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் நேரலையாக ஒளிபரப்ப இணைந்திருங்கள்!

செந்தமிழன் STUDIO
077 6405572

**மேசன் வேலையாட்கள் தேவை**

பிரபல கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றிற்கு திருநெல்வேலி பகுதியில் மேசன், கூலி, உப ஒப்பந்தகாரர் போன்ற வேலையாட்கள் தேவை.

T.P: 077 239 7211

**உடனடி பணி வாய்ப்பு**



இணைய தொலைக்காட்சி
இணைய வானொலி

பணியாற்ற ஆர்வமுள்ளோர் விண்ணப்பிக்கலாம்
அனுபவம் உள்ளோருக்கு முன்னுரிமை

ஆர்வம் உள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் 28.08.2024 புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு நேரில் வரவும்
உதயன் தலைமை அலுவலகம்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில்
172 நிலப்பரப்புக்காணி விற்பனைக்குண்டு

- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna College 1Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி, 500 M, தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

077 294 1521, 077 288 0152,
076 755 8606
(CS 1221) V-1

**காணி விற்பனைக்கு**

கொடிகாமம் கச்சாய் வீதி (J/27 இல்) 10 பரப்புக் காணி தென்னை, தோட்டப்பயிர்ச் செய்கைக்கு ஏற்ற காணி விற்பனைக்குண்டு.

077 699 2082
Whatsapp: 077 754 9803
(cs.56036) (N-1)

**JOB VACANCY / வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னாரில் இருக்கும் எமது நளின் நிறுவனத்தின் கிளைக்கான வேலைவாய்ப்பு

- Accounts Managers - 2 Person (DEGREE - BBA/BCOM/HNDA) (2 years Experience) - Jaffna
- Showroom Manager - 1 Person (Male) - Mannar / Kilinochchi
- Technician - 2 Person (Male) - Mannar
- Service Center Assistant - 2 Person (Female) - Mannar
- Marketing Manager - 1 Person - 2 Years Experience - Jaffna
- Social Media Coordinator - 2 Person (Part Time) - Jaffna

Qualifications / தகைமைகள்

- குறித்த துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரி Vehicle License வைத்திருத்தல் கட்டாயமானது.
- நேர்காணலின் போது சம்பளம் மற்றும் சலுகைகள் பற்றி கலந்துரையாட முடியும்.


If you are interested to apply,
Please send your CV to this mail or Whatsapp 077 542 7426

NALIN Information Technologies(Pvt)Ltd
Computers of the North

Email – career@nit.lk
Contact No - 021 222 0808
077 542 7426

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 04 . 1979



இறப்பு 27 . 08 . 2024

### அருள்நேசன் அருள்வதனன் (வதனன்)

சசி மில் லேன் சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாயை நிரந்தர வதிடமாகவும், சேவிஸ் வீதி, கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட அருள்நேசன் அருள்வதனன் (வதனன்) நேற்று (27.08.2024) செவ்வாய்க்கிழமை 155ம் கட்டை, ஏ9 வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற அருள்நேசன் - சந்திரவதனி தம்பதியினரின் மூத்த புதல்வனும், வனிதா (ரூபி) யின் அன்புக் கணவரும், இந்துஜா (மாணவி- கிளி மத்திய கல்லூரி), இந்துஜன் (கனாகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமசாமி- ஜீவராணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயவதனி, திவ்வியவதனி, திருபவதனி, கோகிலவதனி, டினேஸ், லோகிதன், தேவகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல்- சசி மில் ஒழுங்கை, சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய் என்னும் முகவரியில் உள்ள அன்னாரது தாயாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கிரிகைகள் நாளை (29.08.2024) வியாழக்கிழமை மாலை 03.00 மணியளவில் இல்லத்தில் இடம்பெற்று, தகனக் கிரிகைகள் விளாவெளி இந்து மயானத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தொடர்புகளுக்கு : 0771632147
0766395647
0765891184

தகவல்:
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.